# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2313 - 2022 දෙසැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2022.12.30

*2313ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | *386* |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | *387* |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2023, சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, சனவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


385- B 082414 - 353 (2022/12)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் / பிரதிக்காணிஆணையாளர்( மாகாணங்களுக்கிடைப்பட்ட) மலவி ஆரச்சிலாகே சன்திரிகா மலவி ஆரச்சி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986.08.07 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/ ப்ர/ 12354 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான சூரியவெவ எனும் முகவரியில் வசிக்கும் ஹெட்டி ஆரச்சிகே சிறிமான்ன என்பவருக்கு கையளிக்கப்பட்டு பதிவி பராக்கிரமபுர- தெற்கு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 301/ 175 ஆம் இலக்கத்தின் கீழ் 1998.05.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பதிரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.01.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் உதுரு குருளு பற்றில்/ கோரளையிலுள்ள 31 ஏ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதவி பராக்கிரமபுர- தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ------ என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு -------- ஆம் இலக்க வெளிக்களத் தாளில் / ------- என்பவரால் தயாரிக்கப்பட்டு T.P.P. 20 N.C.P.(13) ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் / ------ என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் --------- ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 00ஏ. 03றூ.27பே. விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: மேட்டு நிலம்.

வடக்கு : காணித் துண்டு இலக்கம் 2582;
கிழக்கு : காணித் துண்டு இலக்கம் 2599,2600;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 2579;
மேற்கு : காணித் துண்டு இலக்கங்கள் 2580, 2573.

எம். சீ. மலவிஆரச்சி,
பிரதேச செயலாளர்,
பதவிய.

பிரதேச செயலகம்,
பதவிய,
2022.10.20.

12- 605/1

---

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரவின், பிரதேச செயலாளரான மலவி ஆரச்சிலாகே சன்திரிகா மலவி ஆரச்சி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4)ஆம் உபபிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.04.26 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/ பத/ ப்ர/ 1284 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பள்ளியராலலாகே தோன மெராயா அலன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 105/43 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.09.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத

காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பதிரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.01.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் வட ஹுருளு பற்றில்/ கோரளையிலுள்ள இல.02, கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதவிய என்ற கிராமத்தில் அமைந்துள்ளதும் ------ என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு -------- ஆம் இலக்க வெளிக்களத் பத்திரத்தில் / ------- என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் -------- காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 00ஏ. 02றூ.00பே. விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: மேட்டு நிலம்.

வடக்கு : இடைப்பாதை ஒதுக்கப்பட்ட காணி;
கிழக்கு : S.A. சரத் ரத்னாயக்க என்பவரின் காணி;
தெற்கு : இடைப்பாதை மற்றும் அரச காணி;
மேற்கு : 38 ஆம் இலக்க மேட்டுக்காணி.
.

எம். சீ. மலவிஆரச்சி,
பிரதேச செயலாளர்,
பதவிய.

பிரதேச செயலகம்,
பதவிய,
2022.08.12.

12- 605/2

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70521.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : EP/ 28/ LB/ LS/ TRI/ MUT/28.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான தக்வா நகர் 223 சீ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பஹ்ரியா நகர் நில வரைபட இலக்கம் 6850 இனையுடைய காணித்துண்டு இலக்கம் 1 இன் 80 பேர்ச் அளவுடைய அரச காணியினை வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு அப்துல் காதர் அப்துல் சபூர் எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு இலக்கம் 01 இன் எல்லைகள்:-
வடக்கு : அல்மனார் பாடசாலை மைதானம்;
கிழக்கு : கராச்சி அரச காணி மற்றும் ஓடை;
தெற்கு : ஓடை;
மேற்கு : அல்மனார் பாடசாலை மைதானம் மற்றும் ஓடை.

03. இக் காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கக்கூடியதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.10.05ஆந் திகதியிலிருந்து);

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது

நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் ஆகியோரின் மனம் திருப்திப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகையாளர் இக்காணியினை வியாபார நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(ஊ) 2022.10.05ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதி அனுமதித்தலாகாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

கே.எல்.பீ. சுபாஷினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.11.30.

12- 601

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69555.
பிரதேச செயலாளரின் (தமன)இல. : பிசெ/த/03/01/01/378 .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், தமன பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மடவலலந்த கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மடவலலந்த கிராமத்தின் குடியேற்ற உத்தியோகத்தரினால் வரையப்பட்ட நில வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ள 4 ஏக்கர், 13.5 பேர்ச். அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. இளந்தாரி தேவ உதய குமாரசிறி என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பவர் லூம் செயற்றிட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்ட காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : நீர் வழங்கல் அதிகார சபையின் அலுவலகத்திற்கான அரச காணி;
மேற்கு : அதிவேக மின் பாய்ச்சல் கம்பம் மற்றும் பிரதான பாதை ஒதுக்கம்.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2022.10.05ஆந் திகதியிலிருந்து);

**வருடாந்தக் குத்தகை.**- 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள்/ காணி ஆணையாளர்/மாகாணக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான)/ பிரதேச செயலாளர் மனம் திருப்தியுறும் வகையில் குத்தகையாளரின் மூலம் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையான அபிவிருத்தி நிலையில் பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) குத்தகை அனுமதித்த திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்துப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கா தகுந்த காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காத பட்சத்தில் காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ.ஏ. டீ.இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.08.

12- 602

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68629.
பிரதேச செயலாளரின் (தமன) இலக்கம் : பிசெ/த/03/01/01/378.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், தமன பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மடவலலந்த கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மடவலலந்த கிராமத்தின் குடியேற்ற உத்தியோகத்தரினால் வரையப்பட்ட நில வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B இன் மூலம் காட்டப்பட்டுள்ள 1 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. இளந்தாரி தேவ உதய குமாரசிறி என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : அரசின் ஆலை செயற்றிட்டத்தின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட காணி;
மேற்கு : பிரதான பாதை ஒதுக்கம்.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2022.10.05ஆந் திகதியிலிருந்து);

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை வாணிப

நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் /காணி ஆணையாளர்/மாகாணக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான)/ பிரதேச செயலாளர் மனம் திருப்தியுறும் வகையில் குத்தகையாளரின் மூலம் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையான அபிவிருத்தி நிலையில் பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) குத்தகை அனுமதித்த திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்துப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாது என ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுந்த காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காத பட்சத்தில் காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ.ஏ. டீ.இஷாரா சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகத மெதுர''.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.08.

12- 603

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62141.
காணி ஆணையாளரின் (மாகாணங்களுக்கிடையிலான)
இலக்கம்: I/I/ C/58/(In).

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இந்திரசாரபுர கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த இந்திரசாரபுர கிராமத்தின் அமையப்பெற்றிருக்கும் நில வரைபட இலக்கம் 280001 இன் காணித்துண்டு இலக்கம் 132 இன் ஒரு பிரிவாகக் காட்டப்பட்டிருக்கும் 10 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு கொடிதுவக்கு ஆரச்சிகே பிரியந்த கொடித்துவக்கு என்பவரால் குத்தகைக்குத் தருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 132 இன் மீதிப் பகுதி;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 131 மற்றும் 129;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 129 மற்றும் 248;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 248 மற்றும் 132.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2022.08.22ஆந் திகதியிலிருந்து);

**வருடாந்தக் குத்தகை.**- 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான)/ பிரதேச செயலாளர் மனம் திருப்தியுறும் வகையில் குத்தகையாளரின் மூலம் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையான அபிவிருத்தி நிலையில் பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) குத்தகை அனுமதித்த திகதியிலிருந்து துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்துப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாது என ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுந்த காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காத பட்சத்தில் காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ.ஏ. டீ.இஷாரா சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.08.

12- 604

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68876.
மாகாணக் காணி ஆணையாளர் இலக்கம் : NCP/ PLC/ L-6/ஹிங்கு/ 04(1).

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் தொகுதிக்கு சொந்தமான 29, மொரகஸ்வெவ கிராம அலுவலர் பிரிவு, திரிசிங்ஹகம- மொரகஸ்வெவ கிராம இடம் அதிகாரியினால் வரையப்பட்ட அண்ணளவான வரைகோடு காண்பிக்கும் கணிப்பீட்டின் படி 3றூட், 20 பேர்ச். அளவான இடப்பகுதி வர்த்தக விடயங்களுக்காக திய அகல ரிசோர்ட்ஸ் என்ட் ஸ்பா தனியார் நிறுவனம் குத்தகைக்கு விண்ணப்பித்திருப்பதை இதனால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் இடத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பிரதேச சபை வீதி சரணாலயம்;
கிழக்கு : பிரதேச சபை வீதி சரணாலயம்;
தெற்கு : டபிள்யூ. ஏ. விமுக்தி சந்தருவனின் இடம்;
மேற்கு : ஜி.ஜி.குணரத்தினத்தின் இடம் மற்றும் லியோன் மஹேஸ் வின்ஸ்லோவின் இடம்.

03. விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் இடம் தேவையின் அடிப்படையில் குத்தகைக்கு கொடுக்க முடியும். ஆயினும், அரசின் அனுமதி வழங்கும் நிபந்தனைகட்கும் அமைவாக மற்றும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைய இடம் குத்தகைக்கு கொடுக்க அரசு அபிப்பிராயம் கொண்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.09.14ஆந் திகதி முதல் 2052.09.13 வரை );

**வருடாந்தக் குத்தகை**.- குத்தகை நடைமுறைக்கு வழங்கப்பட்ட வருடத்தில் இடத்தின் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியானது ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் பட்சத்தில் பிரதன பெறுமதி நிர்ணயிப்பவரின் நிர்ணயத்தின்படி அவ்வருடத்தில் இடத்தின்சந்தை பெறுமதியின் 2% ஆகும். குத்தகை நடைமுறைக்கு வழங்கப்பட்ட வருடத்தில் இடத்தின் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) அதிகமாக இருக்கும் பட்சத்தில் பிரதான பெறுமதி நிர்ணயிப்பவரின் நிர்ணயத்தின்படி அவ்வருடத்தின் இடத்தின் சந்தை பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கும் ஒரு முறை மீள திருத்தம் செய்யப்பட வேண்டியதோடு அவை கடந்த ஐந்து வருடத்தின் முடிவில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தோடு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெறுபவரினால் குத்தகை நடைமுறைக்கு வந்த நாள் முதல் ஒரு வருடத்திற்குள் பிரதேச

செயலாளரின் உள்ளத்தை வென்றெடுக்கும் வித்தில் இடத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.;

(இ) குத்தகைக்குப் பெறுபவரினால் இவ்விடத்தை வர்த்தக விடயங்களுக்காக அன்றி வேறு விடயங்களுக்காக பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கு இக்குத்தகை உட்பட்டிருக்க வேண்டும்;

(உ) கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்கள் தரமான முறையில் கட்டப்பட்டதாக அமைந்திருக்க வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் காலத்தில் குத்தகைக்கு பெற்றுக்கொண்டவரினால் காணி பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள நியமித்த காலவரையறைக்குள் தவறும் பட்சத்தில் குத்தகை நிறைவு செய்யும்படி நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை நடைமுறைக்கு வந்த நாள்முதல் ஐந்து வருடங்கள் ஆகும் வரை இந்த இடம் குத்தகைக்கு எடுக்கப்பட்ட காரணம் கலந்தாலோசிக்கும் காலத்திற்குள்ளான குத்தகை அல்லது பொறுப்பளித்தல் தவிர, மேலும் வேறு ஒருவருக்கு குத்தகைக்கு விடுவது அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் தொடர்ந்தும் கொடுக்க வேண்டியிருப்பதோடு குத்தகை கொடுக்க மறுக்கும் பட்சத்தில் பொருத்தனை இயல்பாகவே செயலற்றுப்போய்விடும் . குத்தகை கொடுக்க தொடந்தும் செலுத்தாமால் விடும் பட்சத்தில் செலுத்த வேண்டிய மிகுதி குத்தகைக்காக 10% தண்டப்பணம் அறவிடப்படும்.

04. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் இருந்து ஐந்து வாரங்களுக்கு குறிப்பிட்ட இடத்தை குத்தகைக்கு கொடுக்கக் கூடாதபடி ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலம் என்னிடம் சமர்ப்பிக்காவிடின் வேண்டுகோளிற்கிணங்க குத்தகை கொடுக்கப்படும்.

டபிள்யூ. வி.டி.டி. அமரசிங்ஹ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.12.

12- 640

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/56993.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NWP/ PLC/ L9/ KL/ LTL/ 34.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 603A கரம்ப கிராம அலுவலர் பிரிவில் நில அளவையாளர் டபிள்யூ. பீ.எம். பிரனான்து அவர்களினால் அளந்து வரையப்பட்ட பூ/ கல்/ 2017/28 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தின் காணித்துண்டு இல.A. விஸ்தீரணம்: 4.5247 ஹெக்டயார். (11ஏ.00றூ.29பே.) கொண்ட அரசாங்க காணித்துண்டு வெங்காயம் சாகுபடி திட்டத்திற்காக மடவலகே ரூபஸ் பிரனான்து அவர்களினால் குத்தகைக்காக கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்படும் காணிக்கான எல்லைகள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஆகும் :-
காணித்துண்டு இல. “A”

வடக்கு : குளம் இருப்பு (அரசாங்கம்);
கிழக்கு : அரசாங்க காணி;
தெற்கு : வீதி (வீ.அ.அ.);
மேற்கு : அரசாங்க காணி.

03.கோரியுள்ள காணியினை தேவையான விடயத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். அதனால் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளுக்கு மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் காணியை குத்தகைக்கு விடுவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.01.21ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் );

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும்(5,000,000) குறையும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கு அமைய சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டு பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும்( ரூ. 5,000,000) அதிகமாகும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கு அமைய சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இக்குத்தகைக் கட்டணம் அனைத்து 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டும்என்பதுடன் அது முதல் 05 வருடங்கள் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைக் கட்டணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வெங்காயம் சாகுபடி திட்டத்திக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(இ) இக் குத்தகை ஆரம்பமாகி ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில் )/ துணை காணி ஆணையாளர் /பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்)/பிரதேச செயலாளர், திட்டத்திற்குரிய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனை விசேட நிபந்தனைகளுக்கு இக் குத்தகை கட்டுப்பட வேண்டும்.;

(உ) கட்டப்பட்டுள்ள/கட்டப்பட வேண்டிய கட்டடங்கள் தகுந்த அபிவிருததி நிலையில் நடாத்தப்பட வேண்டும். ;

(ஊ) காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள போது குத்தகையாளர் காணியை பெற்றுக்கொண்ட விடயத்தினை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தவறினால் குத்தகையை இறுதி செய்வதற்கான செயற்பாடுகள் எடுக்கப்படும்;

(எ) 2022.01.21 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் ஆகும் வரை இடைக்கால குத்தகை அல்லது பரிமாற்றங்களுக்காக அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக் கட்டணம் தொடர்ந்து செலுத்த வேண்டும் என்பதுடன் குத்தகைக் கட்டணத்தினை செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை தானாக இரத்து ஆகிவிடும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்

டப். ஏ. ஆர். டீ. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.12.

12-641

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65994.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NWP/ PLC/ L9/ KL/ LTL/ 22.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 603A கரம்ப கிராம அலுவலர் பிரிவில் நில அளவையாளர் எஸ். மரியதாஸ் அவர்களினால் அளந்து வரையப்பட்ட 3298ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தின் காணித்துண்டு இல.01 மற்றும் 02 . விஸ்தீரணம்: 0.7301ஹெக்டயார். (01ஏ.03றூ.8.64பே.) கொண்ட அரசாங்க காணித்துண்டு மண்டபம் நடாத்துவதற்காக ஏகநாயக தென்னகோன் முதியன்சேலாகே நயன சிறிலால் அவர்களினால் குத்தகைக்காக கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்படும் காணிக்கான எல்லைகள் கீழ் குறிப்பிட்டுள்ள வாறு ஆகும் :-

காணித்துண்டு இல. "1"

வடக்கு : அரசாங்கக் காணி (குளம்);
கிழக்கு : அரசாங்கக் காணி (குளம்);
தெற்கு : அரசாங்கக் காணி (குளம்) மற்றும் வீதி (வீ.அ.அ.) ;
மேற்கு : அரசாங்க காணி (குளம்).

காணித்துண்டு இல. "2"

வடக்கு : அரசாங்கக் காணி (குளம்);
கிழக்கு : அரசாங்கக் காணி (குளம்);
தெற்கு : வீதி (வீ.அ.அ.) ;
மேற்கு : தரவைக் காணி (அரசாங்க).

03.கோரியுள்ள காணியினை தேவையான விடயத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். அதனால் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளுக்கு மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் காணியை குத்தகைக்கு விடுவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.01.21ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் );

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும்(5,000,000) குறையும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கு அமைய சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டு பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000) அதிகமாகும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கு அமைய சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இக்குத்தகைக் கட்டணம்

அனைத்து 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அது முதல் 05 வருடங்கள் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைக் கட்டணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய மண்டபம் நடாத்துவதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(இ) இக் குத்தகை ஆரம்பமாகி ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்)/ துணை காணி ஆணையாளர் /பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/ காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்)/ பிரதேச செயலாளர், திட்டத்திற்குரிய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனை விசேட நிபந்தனைகளுக்கு இக் குத்தகை கட்டுப்பட வேண்டும்.;

(உ கட்டப்பட்டுள்ள/கட்டப்பட வேண்டிய கட்டடங்கள் தகுந்த அபிவிருத்தி நிலையில் நடாத்தப்பட வேண்டும்: ;

(ஊ) காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள போது குத்தகையாளர் காணியை பெற்றுக் கொண்ட விடயத்தினை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தவறினால் குத்தகையை இறுதி செய்வதற்கான செயற்பாடுகள் எடுக்கப்படும்;

(எ) 2022.01.21 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் ஆகும் வரை இடைக்கால குத்தகை அல்லது பரிமாற்றங்களுக்காக அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக் கட்டணம் தொடர்ந்து செலுத்த வேண்டும் என்பதுடன் குத்தகைக் கட்டணத்தினை செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை தானாக இரத்து ஆகிவிடும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்

டப். ஏ.ஆர். டீ. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.12.

12-642

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/72112.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NWP/ PLC/ L/MU/ LTL/20

.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில், முந்தல் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இலக்கம் 609/ஏ புபுதுகம கிராம அலுவலர் பிரிவில் கணேமுலை கிராமத்தில் அமைந்துள்ள குடியேற்ற உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட 2022/2 அடிச்சுவடு அ.இ.01 அளவில் 14 ஏக்கர் (ஹெக்டயார் 5.665 ) ஆக உள்ள அரச காணியை இறால் பண்ணையொன்றை நடத்திச் செல்வதற்காக ரய்டா அக்வா பாம் (பிரைவட்) லிமிடட் இனால் குத்தகைக்கு வேண்டப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. கோரப்படும் காணிக்கான எல்லைகள் கீழ் குறிப்பிட்டுள்ள வாறு ஆகும் :-

காணித்துண்டு இல. "1" இன் எல்லைகள்.-
வடக்கு : நிஸ்தாரின் காணி;
கிழக்கு : இர்ஷானின் காணி;
தெற்கு : தானுல் ஹம்பியின் காணி;
மேற்கு : அரச காணி.

03. வேண்டப்பட்டிருக்கும் காணியை தேவையான காரணத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். அதனால் அரசின் நிறைவேற்றப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதுகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.11.30ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் );

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விட (5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ்வாண்டில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியனை விட (ரூ. 5,000,000) அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ்வாண்டில் காணியினது சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது 05வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அது முன்னைய 05 வருட இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இக்காணியினை வர்த்தக நடவடிக்கைகள் அன்றி வேறு

எந்தவொரு செயற்பாட்டிற்கம் பயன்படுத்துதல் கூடாது.;

(இ) இக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருடத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரனது மனம் கவரும் வகையில் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர், செயற்றிட்டத்துடன் தொடர்பான நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை உட்பட்டிருத்தல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டிடங்களை சரியான அபிவிருத்தி நிலைமையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கியுள்ள காலப்பகுதிக்குள் குத்தகைக்காரருக்கு காணியை பெற்றுக் கொண்ட விடயத்தினை அடைந்து கொள்ள உரிய காலப் பகுதியில் இயலாமல் போயிருப்பின் குத்தகையை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2022.11.30 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் கழியும் வரையில் இடைக்கால குத்தகையோ அல்லது உரித்தளித்தல் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.;

(ஏ) குத்தகைக் கூலியை இடைவிடாமல் செலுத்தி வரவேண்டும் என்பதுடன், குத்தகை செலுத்துவதை புறக்கணித்து வரும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் இயல்பாகவே இரத்தாகி விடும்;

(ஐ) குத்தகை செலுத்தப்படுவது தொடர்ந்து மேற்கொள்ளப் படாத வேளையில் செலுத்தப்பட வேண்டிய நிலுவையான குத்தகை தொகைக்கு 10% தண்டப்பண வட்டியொன்று அறவிடப்படும்.

04. இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் 06 வார காலப்பகுதிக்குள் உரிய காணியை குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதாக ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களை எழுதி என்னிடம் சமர்ப்பித்தற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் வேண்டுகோள் பிரகாரம் குத்தகை வழங்கப்படும்.

டப். ஆர். ஏ. டீ. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.12.

12-643

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68870.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NWP/ PLC/ L9/MK/ LTL/15.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தில், மஹகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவுக்குரிய 658/ஏ வல்பாலுவ கிராம அலுவலர் பிரிவின் வல்பாலுவ கிராமத்தில் அமைந்துள்ள எப்.வீ. பீ. 3386 இன் லொட் இலக்கம் 239 இன்பகுதி எப்.வீ.பீ. 3386 இன் லொட் இலக்கம் 29 இன் பகுதி அத்துடன் எப்.வீ. பீ. 3387 இன் லொட் இலக்கம் 28 இன் ஒரு பகுதி ஒன்று உள்ளடங்குமாறு கொலனி அதிகாரியால் வரையப்பட்ட தற்காலிக வரைபடத்திற்கு இணங்க பரப்பளவில் 13 ஏக்கர், 03 றூட், 14 பேர்ச் விஸ்தீரணமான அரச காணித்துண்டு விவசாய நடவடிக்கைக்காக திரு. ஸ்வர்னகே பியசிறி சுனில் சாந்தா அவர்களினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

02. வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எப்.வீ.பீ. 3388 இன் லொட் இலக்கம் 133 அத்துடன் வீதி;
கிழக்கு : எப்.வீ. பீ. 3388 இன் லொட் இலக்கம் 29;
தெற்கு : எப்.வீ. பீ. 3387 இன் லொட் இலக்கம் 28;
மேற்கு : எப்.வீ. பீ. 3386 இன் லொட் இலக்கம் 133 .

03.வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலத்தை, தேவையான விடயத்துக்காக வாடகைக்கு விட முடியும். எனவே அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிலத்தைர குத்தகைக்கு விட அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.06.30ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- நிதி நிலத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாய் (ரூ.5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டு அதிகாரியின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் நிலத்தின் சந்தை மதிப்பில் 2% ஆகும். வருடாந்தக் குத்தகை நிதி நிலத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாய்க்கு (ரூ.5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டு அதிகாரியின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் நிலத்தின் சந்தை மதிப்பில் 4 % ஆகும். இந்த குத்தகை நிதி ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டியதுடன் அது முன் 05 வருட காலத்தின் இறுதியில் அறவிட்ட வருடாந்த குத்தகை நிதியிற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* வசூலிக்கப்பட மாட்டாது.

(ஆ) இந்த நிலம் விவசாயப் பொருளாதார நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்த பணிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது.;

(இ) இந்தக் குத்தகைக் காலம் ஆரம்பித்து ஒரு வருடத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதி காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியுறுமாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(ஈ) இந்தக் குத்தகையானது மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களால் விதிக்கப்பட்ட விசேட நிபந்தனைகளுக்கு உட்பட்டது;

(உ) கட்டப்பட்ட /ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்கள் சரியான அபிவிருத்தி நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்;

(ஊ) குத்தகையின் போது குத்தகைதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் நிலம் குத்தகைக்கு விடப்பட்ட நோக்கத்தை அடையத்தவறினால் குத்தகையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.06.30 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் முடிவடையும் வரை துணை குத்தகை அல்லது கையளிப்புச் செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைத் தொகை தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும். அதே சமயம் குத்தகைக் கட்டணம் செலுத்தத் தவறினால், குத்தகை உடன்படிக்கை தானாகவே இரத்துச் செய்யப்படும்;

(ஐ) குத்தகைத் தொகை தொடர்ந்து செலுத்தப்படாத நிலையில், நிலுவைத் தொகையில் 10% அபராதம் விதிக்கப்படும்.

04. கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து 06 வாரங்களுக்குள் சம்பந்தப்பட்ட காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எழுத்து பூர்வமாக என்னிடம் சமர்ப்பிக்கப்படாவிட்டால் வேண்டுகோளின்படி காணி குத்தகைக்கு விடுக்கப்படும்.

டப். ஆர். ஏ. டீ. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.10.15.

12-645

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/72096.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NWP/ PLC/ L10/ WW/LTL/42.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

சுற்றுலாத்துறை நோக்கத்துக்காக அரின்மா வில்லாஸ் வில்பத்து (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனமானது , புத்தளம் மாவட்டத்தில் வனாத்தவில்லு பிரதேச செயலக அதிகார இடப்பரப்பினுள் வருகின்ற 635/1 புதிய எழுவான்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குத்தான எழுவான்குளம் கிராமத்தில் அமைந்துள்ளதும், 2022/02 ஆம் இலக்கத்தைக் கொண்ட குடியேற்ற அலுவலரினால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறு அடையாளமிடப்பட்ட பரப்பளவில் கிட்டத்தட்ட 10 ஏக்கர், 01 றூட், 37பேர்ச். பரப்பளவைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டொன்றை குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு கோரியுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. கீழே தரப்பட்டுள்ளவை கோரப்பட்ட காணியின் எல்லைகளாகும் :-

வடக்கு : கால்வாய் ஒதுக்கீடு;
கிழக்கு : புதர்க்காடு (அரசாங்க);
தெற்கு : வீதி (புதர்க்காடு) ;
மேற்கு : வீதி (புதர்க்காடு) .

03.கோரப்பட்ட காணியை தேவைப்படுத்தப்பட்ட நோக்கத்துக்காக குத்தகை அடிப்படையில் வழங்க முடியும். ஆகவே அரசாங்கமானது சொல்லப்பட்ட காணியை பின்வரும் நிபந்தனைகளுக்கும் மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிபந்தனைகளுக்கும் அமைய குத்தகைக்கு விடுவதற்கு உட்கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2022.11.30ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் );

**வருடாந்தக் குத்தகைப் பணம்** .- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட விலைமதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விட (ரூபா 5,000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதம மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டிற்கமைய, சொல்லப்பட்ட ஆண்டில் காணியினது சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட விலைமதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விட (ரூபா 5,000,000) அதிகமாக இருக்குமிடத்து, பிரதம விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டுக்கமைய, சொல்லப்பட்ட ஆண்டில் காணியினது சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகையானது ஒவ்வோர் ஐந்தாண்டுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அது முற்போந்த ஐந்தாண்டின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்துடன் 20 % தொகையைச் சேர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

*கட்டுப் பணம் :* அறவீடு செய்யப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றவர் இக் காணியை வணிக நோக்கங்கள் தவிர்ந்த வேறேதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தலாகாது.;

(இ) குத்தகைக்குப் பெற்றவர் இக்காணியை வணிக நோக்கங்கள் தவிர்ந்த வேறேதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தலாகாது;

(ஈ) குத்தகைக்குப் பெற்றவர், இக் குத்தகை தொடங்கப் பட்டதிலிருந்து ஓராண்டுக்குள், மாகாணக் காணி ஆணையாளரின் / பிரதிக் காணி ஆணையாளரின் / பிரதேச செயலாளரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான அத்தகைய முறையில் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) இந்தக் குத்தகையானது மாகாணக் காணி ஆணையாளரினால்/ பிரதேச செயலாளரினால் மற்றும் கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களினால் அத்துடன் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்ட் வேறு விசேட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் முறையானதொரு செப்பனிடல் தரத்துடன் பேணப்படுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு விடப்பட்டதும் குத்தகைக்குப் பெற்றவரினால் அக்காணி எந்த நோக்கத்துக்காக பெறப்பட்டதோ அந்த நோக்கத்தை அவர் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் நிரூபிக்கத் தவறும் பட்சத்தில், குத்தகையை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.11.30. ஆந் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 05 ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவடையும் வரை காணியை உப குத்தகை விடுவதற்கோ, கைமாற்றுவதற்கோ அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப்பணம் ஒழுங்குமுறையாகச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் கொடுப்பனவில் தவணை தவறினால் இவ்வுடன்படிக்கையானது அந் நிகழ்வினாலேயே, காலாவதியாகிவிடும். குத்தகைப் பணம் ஒழுங்குமுறையாகச் செலுத்தப்பட்டிராதவிடத்து குத்தகையின் செலுத்தப்படற்பாலனவான எஞ்சியுள்ள தொகைகளுக்கு 10% வட்டி தண்டமாக அறவிடப்படும்.

04. இதன்கண் கீழே தரப்பட்டுள்ள திகதியிலிருந்து 06 வாரங்களினுள் இக்காணி குத்தகைக்கு விடப்படலாகாதெனப் பயன்படும் வகையில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க காரணங்கள் எழுத்துமூலம் எனக்குச் சமர்ப்பிக்கப்படாதிருப்பின், காணியானது கோரப்பட்டவாறு குத்தகைக்கு விடப்படும்.

டப். ஆர். ஏ. டீ. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.12.14.

12-644